# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/78 - 2018 ඔක්තෝබර් මස 07 වැනි ඉරිදා - 2018.10.07

*2091/78 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

மத்திய மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம்

மத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை அலுவல்கள் அமைச்சர் பந்துல எஸ். பீ. யாலேகம ஆகிய நான், இங்கு பிரசுரமாகும் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மத்திய மாகாணத்தின் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம் 2018.09.18ஆந் திகதி மத்திய மாகாண சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட பின் 2018.10.05 ஆந் திகதி மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது என்பதை அறியத் தருகின்றேன்.

**பந்துல எஸ். பீ. யாலேகம,**
மத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய,
சமூக நலன், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு,
சேவை அலுவல்கள் அமைச்சர்.

மத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய,
சமூக நலன், நன்னடத்தை மற்றும் சிறுவர்
பராமரிப்புச் சேவை அலுவல்கள் அமைச்சு,
த.பெ. இல. 121,
சங்கராஜ ஒழுங்கை,
கண்டி.
2018, ஒற்றோபர் 07.




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம்**

*அநாதை, கைவிடப்பட்ட, கவனிப்பாரற்ற, நீதிமன்ற உத்தரவொன்றின்படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுக்காக வதிவிடம், பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்காக செயற்படுகின்ற தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் என்பன தொடர்பாகவும் அது தொடர்பாக ஆணையாளரின் அதிகாரங்களை தீர்மானிப்பதற்காகவும், அவற்றுடன் தொடர்புடைய மற்றும் அவை சார்ந்த காரணிகளுக்காக நியமங்களை அமைக்கும் நோக்கிலான நியதிச் சட்ட வரைபாகும். இந்த நியதிச்சட்ட வரைபு (142 வது அதிகாரமாகிய) அநாதைகள் சட்டமூலத்துடன் தொடர்பற்றதாகும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது.

*சுருக்கப் பெயரும் நடைமுறைத் திகதியும்.*

1. இந்த நியதிச்சட்டம் மத்திய மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலைய நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் இது மத்திய மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெற்றதன் பின் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்தே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*சிறுவர் பாதுகாப்பு நிலையம் பதிவு செய்தல் தொடர்பான நியமங்கள்.*

2. இந்த நியதிச்சட்ட வரைபு நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து குறித்த கருமம் தொடர்பாக இந்நியதிச்சட்ட வரைபின் நியதிகளுக்கு அமைவாக பதிவு செய்யாது, பிறப்பு முதல் பதினெட்டு வயது வரையான அநாதைகள், கைவிடப்பட்டவர்கள், இயலாமைக்குட்பட்டவர்கள், நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுக்காக மாகாணத்தினுள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நடாத்துதல் கூடாது.

*சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் நிர்வாகம் தொடர்பான பொறுப்புகள்.*

3. இந்த நியதிச்சட்ட வரைபிற்கு உட்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்கள் இந்த நியதிச்சட்ட வரைபின் கீழ் பதிவு செய்துகொள்ளும் அனைத்து தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் மேற்பார்வை செய்தல் மட்டும் கட்டுப்பாடுகளை இடுவதற்கான பொறுப்பு (இதன்பின்னர் ஆணையாளர் என குறிப்பிடப்படும்) மத்திய மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரிடம் வழங்கப்படும்.

*பதிவு செய்வதற்கான தகைமைகள்.*

4. இந்த நியதிகளின் அடிப்படையில் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையங்களை பதிவு செய்வதற்கான தகைமைகள் கீழ்வருமாறு அமைய வேண்டும்:-

(அ) பதிவுக்காக விண்ணப்பிக்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தும் அரசு சாராத அமைப்பு அதன் யாப்பின் அடிப்படையில் இலங்கையில் பதிவு செய்து கொண்டுள்ள தன்னார்வ அமைப்பாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்துவதற்காக அரசு மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து நிதியுதவிகளும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும் என்பதுடன் கணக்கு அபிவிருத்தி நிலையத்தின் பெயரில் அமைய வேண்டும்;

(இ) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நிர்வகிப்பதற்கு தலைவர், செயலாளர், உப தலைவர், பிரதிச் செயலாளர், உப செயலாளர், பொருளாளர், முகாமையாளர் என ஆகக் குறைந்த அங்கத்தவர்களாக ஏழு பேர் கொண்ட முகாமைக் குழு ஒன்று இருக்க வேண்டும்;

(ஈ) தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், முகாமையாளர் ஆகியோர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

மற்றும்

(உ) முகாமைக் குழுவின் அங்கத்தவர்களில் மூவருக்கு குறையாதவர்கள் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் நிறுவப்படவிருக்கும் இடத்திற்குறிய பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்;

(ஊ) குறித்த தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்காக விண்ணப்பிப்பவருக்கு குறித்த நிலையத்தின் உரிமம் இருக்க வேண்டும் என்பதுடன் குறித்த இல்லத்திற்குரிய அசையும், அசையாத சொத்துக்களுக்கான உரிமமும் இருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரர் மேற்படி 04ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் அமைப்பதற்கான ஆகக் குறைந்த தரநிர்ணயத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*சுயாதீன சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்துவதற்கான தற்காலிக அனுமதி.*

5. (01) மாகாணத்தினுள் தன்னார்வ சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு விரும்புகின்ற ஏதேனுமொரு தன்னார்வ அமைப்பொன்று இந்த நியதிச்சட்ட வரைபின் 4 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த அபிவிருத்தி மையத்தின் முகாமையாளராக பணியாற்றுவதற்காக பெயர் குறிப்பிடும் நபரின் மூலம் கையெழுத்திடப்பட்டதும் மேலும் இந்த நியதிச்சட்டத்தின் 1ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் ஊடாக குறித்த தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்துவதற்கான தற்காலிக அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம்.

(02) (1) ஆம் இலக்க உபபிரிவின் கீழ் தற்காலிக அனுமதிக்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் தேவையான அடிப்படையில் பரிசோதனைகளை நடாத்தி அது தொடர்பான அறிக்கையினை குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்குள் தன்னிடம் முன்வைக்குமாறு ஆணையாளரால் நன்னடத்தை அதிகாரி அல்லது ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்படுகின்ற குறித்த தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தருக்கு உடனடியாக கட்டளை பிறப்பிக்க வேண்டும்.

(03) (2) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் மற்றைய காரணிகள் அடங்களாக 4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பதிவு செய்வதற்கான தகைமைகள் அனைத்தையும் விண்ணப்பதாரி பெற்றுள்ளாரா என்பதையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

*அனுமதி வழங்கல்.*

6. (1) இங்கு 5 ஆம் அத்தியாயத்தின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து ஆணையாளர் ஆராய்ந்ததன் பின்;

மற்றும்

(அ) அதில் பரிந்துரைக்கப்பட்ட தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ள பிரதேசத்தில் அக்காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் இயங்கிவருமாயின் அப்பிரதேசத்தில் புதிய சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான தேவை என்ன என்பதை தெளிவாக அறிந்து கொண்டதன் பின்.

(ஆ) பரிந்துரைக்கப்பட்ட தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் அமைக்கவிருக்கும் பகுதிக்கு தாமாகவே விஜயம் செய்து அங்கு பெற்றுக் கொள்ளும் ஏனைய தகவல்களும் கருத்தில் கொண்டதன் பின்.

(இ) உத்தேச தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் அமைப்பதற்காக மக்கள் கருத்துக்களைப் பெறுவதற்காக பிரதேச செயலக காரியாலயத்தில் அல்லது கிராம அலுவலர் அலுவலகத்தில் அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டு, 14 நாட்களில் கருத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான அனுமதி வழங்குவதா இல்லையா என்பது குறித்து தீர்மானத்தை மேற்கொள்ளலாம்.

தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் அமைப்பதற்காக கோரப்பட்டிருக்கும் தற்காலிக அனுமதிப்பத்திரத்தை வழங்குவதா அல்லது வழங்காமல் இருப்பதா என்பது தொடர்பான தீர்மானத்திற்கு வர வேண்டும்.

(2) ஆணையாளருக்கு கிடைக்கப்பெறுகின்ற ஏதேனும் ஒரு கோரிக்கைக்காக வழங்கப்படுகின்ற தீர்மானம் குறித்த கோரிக்கை கிடைக்கப் பெற்று மூன்று மாதங்களில் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் ஆணையாளரினால்-

(அ) அனுமதி மறுக்கப்படுவதாக தீர்மானிக்கப்படுமாயின் அனுமதி மறுக்கப்படுவதற்கான காரணம் விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும்,

அல்லது

(ஆ) அனுமதி வழங்க தீர்மானிக்கப்படின் இந்த நியதிச்சட்ட வரைபின் II ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் படிவத்திற்கு அமைய தற்காலிக அனுமதிப்பத்திர சான்றிதழ் ஒன்று விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(3) (1) ஆவது உப பிரிவின் (ஆ) தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிச் சான்றிதழ், அமைச்சரால் குறித்த காலத்தில் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு உட்படவேண்டும் என்பதுடன், சான்றிதழ் வழங்கப்படும் தினத்திலிருந்து ஆறு மாதங்கள் (06) செல்லுபடியாகுதல் வேண்டும்.

*சுயாதீன சிறுவர் மேம்பாட்டு நிலையம் அமைப்பதற்காக வழங்கப்படுகின்ற காலப்பகுதிக்குள் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பது.*

7. (1) 06 ஆவது உப பிரிவின் கீழ் தற்காலிக அனுமதிக்கான சான்றிதழ் பெற்றுக் கொண்ட ஒருவரால் அந்த சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படும் கால எல்லை முடிவடைவதற்குள் குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையம் நிறுவப்பட வேண்டும் என விதிக்கப்படுவதுடன் நிறுவப்படுவதற்கான பணிகள் நிறைவு பெற்றதை உறுதிப்படுத்தும் அறிக்கை ஒன்று இந்த நியதிச்சட்ட வரைபிற்கு அமைய தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையம் ஒன்றாக பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) (1) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்ட ஆறு மாத (06) காலத்தினுள் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையத்தினை ஆரம்பிப்பதற்காக தற்காலிக அனுமதிச் சான்றிதழ் வழங்கப்பட்ட அமைப்பொன்றுக்கு குறித்த காலத்தினுள் அப்பணியை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்படுமிடத்து அது குறித்து அவ்வமைப்பு ஆணையாளரிடம் எழுத்து மூலமாக கோரிக்கை ஒன்றை முன்வைக்குமிடத்து மேதிகமாக அதிகபட்ச அடிப்படையில் மேலும் ஆறு (06) மாதங்கள் கால நீடிப்பை வழங்க முடியும்.

*சுயாதீன சிறுவர் மேம்பாட்டு நிலையம் பதிவு செய்தல்.*

8. (1) (7) உப பிரிவுக்கு அமைய (1) ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கிடைத்து ஒரு மாத காலத்துக்குள் ஆணையாளருக்கு அவராக அல்லது யாரேனுமொரு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் மூலமாக

(அ) தற்காலிக அனுமதிச் சான்றிதழ் வழங்கப்பட்ட காலம் முதல் குறித்த இல்லத்தில் சேர்க்கப்பட்ட சிறுவர்களின் நலன்கள் உறுதி செய்யப்படும் அமைப்பில் குறித்த சிறுவர் மேம்பாட்டு மையம் செயற்படுவதற்காக திறனைக் கொண்டுள்ளதா என்பதும்,

மற்றும்

(ஆ) எனவே, குறித்த மையம் இந்த நியதிச்சட்டத்திற்கு அமைய பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பது பற்றி தீர்மானிக்கப்படுவதற்காக சரியானதும் சரியான முறையிலானதுமான பரிசீலனை மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) (1)ஆவது உப பிரிவின் பிரகாரம் நடாத்தப்படும் பரிசீலனை மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின் ஆணையாளர் மூலமாக

(அ) குறித்த மையத்தை பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையமாக பதிவு செய்து இந்த நியதிச்சட்ட வரைபின் iii ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய பதிவுச் சான்றிதழ் வெளியிடப்பட வேண்டும்.

(ஆ) குறித்த மையத்தை பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையமாக பதிவு செய்தலானது 10 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு காரணம் அல்லது பல காரணங்கள் குறித்துக் காட்டப்பட்டு பதிவு மறுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டும்.

(3) (2) துணை பிரிவு (அ) பிரிவின் விடயங்களுக்கு அமைவாக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அது வழங்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று ஆண்டு காலம் வரை செல்லுபடியாகும் என்பதுடன் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் நியதி மற்றும் விதிமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

(4) ஆணையாளரினால் உபபிரிவு (2), (ஆ) பிரிவின் பிரகாரம் பதிவு செய்தல் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அது வரை காலமும் வழங்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதிச் சான்றிதழ் அமுலில் இருக்குமாயின் அது இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அந்த மையத்தில் சேர்க்கப்பட்டிருக்க முடியுமான அநாதை, கைவிடப்பட்ட, நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்கள் இந்த நியதிச் சட்ட வரைபின் 19 ஆவது அத்தியாயத்தின் விதிமுறைகள் குறித்த திருத்தங்கள் சகிதம் பின்பற்றப்பட வேண்டும்.

*பதிவுச் சான்றிதழ் புதுப்பித்தல்.*

9. பதிவுச் சான்றிதழ் காலாவதியாகும் தினத்திற்கு முன்னரான மூன்று மாத காலத்திற்குள் விண்ணப்பிக்கும்போது சான்றிதழ் புதுப்பிக்கப்படலாம் என்பதுடன் புதுப்பித்தல் சம்பந்தமாக இந்த நியதிச்சட்ட வரைபின் 8 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் அவசியமான திருத்தங்கள் சகிதம் ஏற்புடையதாக வேண்டும்.

*பதிவு மறுக்கப்படுவதற்கான காரணங்கள்.*

10. (1) தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையம் ஒன்று 7 ஆம் அத்தியாயத்தின் (2)ஆம் துணைப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு மையமாக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கீழ் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு காரணத்தினால் அதாவது-,

(அ) குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தை நிர்வகிப்பதற்கு பராமரிப்பதற்கும் போதுமான வளங்கள் விண்ணப்பதாரர் வசம் இல்லாதிருப்பதாக அல்லது குறித்த மையத்தை வகிப்பதற்கு பராமரிப்பதற்கும் போதுமான வளங்களைத் திரட்டிக் கொள்வதற்கு விண்ணப்பதாரரால் முடியாது என்பதாக ஆணையாளர் அறியுமிடத்து,

(ஆ) தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் அநாதை, கைவிடப்பட்ட, நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களது கல்வி அல்லது வேறு பயிற்சி நெறிகளுக்கான இடங்கள், உரிமம், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்குவதற்கு அல்லது குறித்த வசதிகளை வழங்குவதற்கான போதிய வளங்களைத் திரட்டிக் கொள்வதற்கு விண்ணப்பதாரரால் முடியாது என்பதாக ஆணையாளர் அறியுமிடத்து,

(இ) தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் முகாமையாளர் அல்லது தன்னார்வமாக செயலாற்றும் ஒருவர் அல்லது ஒரு உத்தியோகத்தர் அல்லது நிலையத்தை நிர்வகிக்கின்ற ஒருவர் குற்றமொன்றிற்காக குற்றவாளியாக்கப்பட்ட ஒருவர் என்பதாக ஆணையாளர் அறியுமிடத்து,

(ஈ) தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் பணி புரிகின்ற ஒருவரின் குணாதிசயம் அல்லது தன்மை என்ன என்பதுடன் குறித்த நிலையத்தில் தன்னார்வமாக பணியில் இருப்பதற்காக அல்லது வேலையில் ஈடுபடுவதற்காக அல்லது நிலையத்தில் வசிக்கும் அநாதை, கைவிடப்பட்ட, நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுடன் கடமையாற்றுவதற்கு தகுதியற்றவர் என ஆணையாளர் அறியுமிடத்து,

(உ) இந்த நியதிச் சட்டத்தின் II ஆம் பிரிவில் அமைச்சரால் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்று பெற்றிருக்க வேண்டிய ஆகக்குறைந்த தரத்தினைப் பேணுவதற்கு குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் தவறியிருப்பதை ஆணையாளர் அறியுமிடத்து,

அல்லது

(ஊ) அமைச்சரினால் காலத்திற்கு காலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல்கள் மூலமாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைய ஏதேனும் ஒரு காரணம் காட்டி ஆணையாளரால் நிராகரிக்கப்படலாம்.

(2) மேலே 1 ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உபபிரிவின் கீழ் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்று தொடர்பில் நிராகரிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மேன்முறையீடு ஒன்றை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கலாம். குறித்த முறையீடு தொடர்பில் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகக் கருதப்படும்.

*சுயாதீன சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்று பேண வேண்டிய ஆகக் குறைந்த தர நிர்ணயம்.*

11. பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ மேம்பாட்டு நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கான ஆகக்குறைந்த தரம் எது என அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல் மூலமாக திட்டவட்டமாக குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு திட்டவட்டமாகக் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் குறித்து வலுவான இணக்கப்பாட்டுடன் செயலாற்றுவது பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பொறுப்பாகும்.

*பரிசோதகர் நியமித்தலும் சிறுவர் மேம்பாட்டு நிலைய பரிசோதனை மற்றும் மேற்பார்வை.*

12. (1)இந்த நியதிச்சட்ட வரைபின் கருமங்களுக்காக மாகாணத்தில் அமைந்திருக்கும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் பரிசோதகர்களாக நன்னடத்தை உத்தியோகத்தர் என்ற பெயரில் அல்லது பதவியில் அரச உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

*(2) (1) ஆம் உப பிரிவின் கீழ் நியமனம் பெறுகின்ற பரிசோதகர் தமது பணிகளில் அல்லது கடமைகளில் ஈடுபடும் போது ஆணையாளரால் விதிக்கப்படுகின்ற நியதிகள் அல்லது ஆலோசனைகள் என்பவற்றின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்பதுடன் , அவருடைய உத்தரவு மற்றும் கட்டளைகளின் கீழ் பணியாற்றல் வேண்டும்.*

*பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையம் பரிசோதனை.*

*13. ஆணையாளரினால் அல்லது அத்தியாயம் 12 இன் கீழ் நியமிக்கப்படுகின்ற பரிசோதகர் அல்லது பரிசோதகர்கள் எந்த நேரத்திலும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தினுள் பிரவேசித்து அதனைப் பரிசோதிக்க முடியும் என்பதுடன் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் சீரமைப்பு, அவை முகாமைப்படுத்தப்படும் விதம், தரம், மற்றும் சிறுவர்களைப் பராமரிக்கும் முறை, குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் ஒவ்வொரு சிறுவர்கள் தொடர்பாக பேணப்படும் அறிக்கைகள் என்பவற்றை பரிசோதித்தல் உற்பட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் அநாதை, கைவிடப்பட்ட, கவனிப்பாரற்ற, நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுக்காக வதிவிடம், பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்காக உத்தரவிடப்பட்ட சிறுவர்களின் நலனுக்கு அவசியம் எனக் கருதும் ஏதேனும் விடயங்கள் தொடர்பாகவும் பரிசோதனைகள் நடாத்தலாம்.*

*பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றிற்கு சிறுவர்களை சேர்த்தல்.*

*14. (1) எந்த சிறுவரேனும்*

*(அ) ஆணையாளர் முன் அனுமதி இல்லாமல்;*

*அல்லது*

*(ஆ) ஏதேனும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்று பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமாக பதிவு செய்த வேளையில் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்ட வயதெல்லை, பாலினம், மதஈடுபாடு என்ற அடிப்படையிலான வேறுபாடுகளின் படி அல்லது வேறு ஏதேனும் வரையறைகள் விதிக்கப்பட்டிருப்பின் அவைகளை மீறும் விதத்திலான சிறுவர்கள் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.*

*(2) (1) ஆம் உபபிரிவில் எவ்வாறான விதிகள் இருந்த போதிலும் சிறுவர் ஒருவர் அவனின் அல்லது அவளின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அல்லது உயிருக்கு பங்கம் ஏற்படும் சந்தர்ப்பம் அல்லது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பம் அல்லது பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருப்பதாக தெரியவரும் சந்தர்ப்பங்களில் ஆணையாளரின் முன் அனுமதியின்றி சிறுவரை பதிவு செய்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் சேர்த்துக் கொள்ளலாம்; என்றாலும் குறிந்த நிலையத்தில் சிறுவரைச் சேர்த்து இரண்டு வாரங்களுக்குள் ஆணையாளரிடமிருந்து உரிய அனுமதியை முகாமையாளர் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

*ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.*

*15. (1) நியதிச்சட்ட வரைபின் iv இணைப்பில் உள்ளவாறான அடிப்படையில் தகவல்களைப் பூரணப்படுத்தி ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் ஆணையாளரிடம் முன்வைப்பதற்கு தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலைய முகாமையாளர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன் அவ்வாறு கோரப்படுமிடத்து குறித்த காலப்பகுதிக்குள் சந்தர்ப்பத்திற்கேற்ப தகவல் வழங்குவதற்காக முகாமையாளர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.*

*(2) (1) ஆம் உபபிரிவில் எவ்வாறான விதிகள் இருந்த போதிலும் ஏதேனுமொரு அறிவித்தல் ஊடாக ஏதேனுமொரு பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தை நிர்வகித்தல் தொடர்பாக ஏதேனும் விசேட காரணம் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு அல்லது அது போன்ற நிலையமொன்றில் வசிக்கும் அநாதை, ஆதரவற்ற, சட்டத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட சிறுவர்களின் நலனை உறுதி செய்தல் பொருட்டு அவசியப்படும் ஏதேனுமொரு தகவலை வழங்குமாறு பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலைய முகாமையாளரிடன் கோருவதற்கு ஆணையாளருக்கு அல்லது ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு அதிகாரமுண்டு.*

*பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் ஊடாக சிறுவர்களை மாற்றுதல்*

*16. (1) பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, சட்டத்தின் மூலம் தனிமையாக்கப்பட்ட சிறுவர் ஒருவரை மாற்றுதல் சம்பந்தமாக ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல் மற்றும் எச்சரிக்கை என்பவற்றுக்கு இணங்க செயலாற்றுவது குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலைய முகாமையாளரின் பொறுப்பாகும் என்பதுடன் குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் ஏதேனுமொரு அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற சட்டத்தின் மூலம் தனிமையாக்கப்பட்ட சிறுவரை ஆணையாளரின் முன் அனுமதியின்றி ஏதேனும் ஒரு முறையில் வேறு ஒரு பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்திற்கு மாற்றுவது அல்லது பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்திலிருந்து நீக்குவது கூடாது.*

(2) பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் இஸ்தாபகக் குழு சிறுவர் ஒருவரை மூன்று வருடங்களுக்குக் கூடிய காலம் குறித்த நிலையத்தில் வைத்திருப்பதற்காக தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில் அத்தீர்மானத்தை ஆணையாளரின் முன்அனுமதியின்றி செயற்படுத்த முடியாது.

ஆணையாளரினால் பொதுவான அல்லது விசேட விதிமுறைகள் பிறப்பித்தல்.

17. (1) ஆணையாளர்,

(அ) பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் நிர்வகிக்கும் முறை திருப்திகரமாக இல்லை என,

(ஆ) இத்தகைய நிலையங்களில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் தங்குமிட வசதிகள் அவர்களின் நலன்களுக்கு போதுமானதாக அல்லது பொருத்தமானதாக இல்லை என;

(இ) அவ்வாறான நிலையங்களில் சிறுவர்களைப் பராமரிக்கும் முறைமை அநாதைகள், கைவிடப்பட்ட, ஆதரவற்ற, சட்டத்தின் மூலம் தனிமையாக்கப்பட்ட சிறுவர்களின் நலனுக்கு மற்றும் பாதுகாப்பிற்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என,

(ஈ) இந்த நியதிச்சட்டத்தின் II ஆவது அத்தியாயத்திற்கு அமைய அமைச்சரால் வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச தரங்களை பராமரிக்க முடியாது என,

அல்லது

(உ) 8 ஆவது அத்தியாயத்தில் (3) ஆவது உபபிரிவின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய செயலாற்றவில்லை என ஆணையாளர் கருதுமிடத்து, குறித்தவைகளை சீரமைப்பதற்காக பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் முகாமைக் குழுவிற்கு சாதாரண அல்லது விசேட உத்தரவுகளை பிறப்பிக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

(2) (1) உபபிரிவின் பிரகாரம் விதிமுறைகள் விதிக்கப்பட்டது முகாமைக் குழுவுக்காயின் அவ்விதிமுறைகளை பின்பற்றுவது அம் முகாமைக் குழுவின் கடமையாகும்.

(3) (1) ஆம் உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட சாதாரண அல்லது பொதுவான விதிமுறைகள்,

(அ) முகாமைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியுமான சந்தர்ப்பங்களில் பதிவுத் தபாலிலும் அல்லது பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் அமைந்திருக்கும் பகுதியின் கிராம சேவை உத்தியோகத்தர் மூலமாக கையளித்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) நிலையத்தின் கட்டிடத்தில் அவதானத்தைப் பெறுகின்ற ஓர் இடத்தில் ஒட்டி விட வேண்டும்.

(4) (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஏதேனும் சாதாரண அல்லது விசேட நியதி ஒன்று பிறப்பிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் முகாமையாளர் அல்லது முகாமைக் குழு அக் கோரிக்கையை நிறைவேற்றாமல் போகுமிடத்து அவற்றைப் பின்பற்றச் செய்வதற்காக அதிகாரமுள்ள நீதிவான் நீதிமன்றம் ஒன்றிடம் கோரிக்கை முன்வைக்க நாடுவதற்கு அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு.

இரத்துச் செய்தல் அறிவித்தல்.

18. (1) பிரிவு 17 (4)ஆம் உபபிரிவின் கீழ் ஆணையாளர் ஒருவரினால் நீதிவானிடம் கோரிக்கை முன்வைத்ததன் பின், நீதிவானால் குறித்த முகாமைக்குழுவின் அங்கத்தவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்யாமலிருப்பதற்கு காரணம் ஏதுமிருப்பின் முன்வைக்குமாறு வேண்டப்படல் வேண்டும்.

(2) (1) ஆவது உப பிரிவின் பிரகாரம் நீதிவான் ஒருவரால் விடுக்கப்படுகின்ற அறிவித்தல் கிடைக்கப் பெற்றதன் பின் முகாமைக் குழுவின் உறுப்பினர்கள் குறித்த அறிவித்தலில் உள்ள திகதியில் நீதிமன்றத்தில் தோன்றாமலிருப்பின் அல்லது நீதிமன்றத்தில் தோன்றி பதிவை இரத்து செய்யாமலிருப்பதற்கு போதிய காரணம் கூறத் தவறுமிடத்து குறித்த பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்க நீதிவானுக்கு அதிகாரம் உண்டு.

(3) பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்து (2) ஆவது உப பிரிவின் பிரகாரம் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றில் ஆணையாளர் அல்லது அவரால் குறித்த பணிக்காக முறையாக நியமிக்கப்பட்ட யாரேனும் ஒருவர் அல்லது 12 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட ஒரு பரிசோதகர் நிலையத்தில் பிரவேசித்து.

(அ) குறித்த நிலையத்தில் வாழும் அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, சட்டத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட சிறுவர்களை மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட இன்னுமொரு தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்திற்கு மாற்றுதல் ;

(ஆ) பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடம் அல்லது பாதுகாவலளாரிடம் ஒப்படைத்தல்;

அல்லது

(இ) ஆணையாளர் தீர்மானிக்கும் வேறு ஒரு இடத்திற்கு சிறுவர்களை மாற்றுவதற்கான அதிகாரம் இருத்தல் வேண்டும்.

பதிவை இரத்து செய்வதன் பிரதிபலன்.

19. (1) பதிவு இரத்துச் செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்றிற்கு அநாதை, கைவிடப்பட்ட, கவனிப்பாரற்ற, நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுக்காக வதிவிடம், பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்காக உத்தரவிடப்பட்ட சிறுவர்களை சேர்த்தலாகாது.

(2) ஏதேனும் ஒருபதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்றின் பதிவுச் சான்றிதழ் இரத்துச் செய்யப்பட்ட போது அல்லது மேன்முறையீட்டின் பின்னர் இரத்துச் செய்தல் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் குறித்த இரத்துச் செய்தலை பொருட்படுத்தாது குறித்த அநாதை, கைவிடப்பட்ட, கவனிப்பாரற்ற, நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுக்காக வதிவிடம், பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்காக உத்தரவிடப்பட்ட சிறுவரை அல்லது சிறுவர்களை அந்த நிலையத்திலிருந்து (1) ஆம் உபபரிவின் பிரகாரம் அந்த இல்லத்திலிருந்து இடமாற்றம் செய்யும் வரை பாதுகாத்தல், பராமரித்தல், உரிமை பேணல் என்பன குறித்த நிலையத்தின் பொறுப்பாக வேண்டும்.

(3) பதிவு இரத்துச் செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்றிற்கு அரசினால் அல்லது மாகாண சபையினால் கிடைக்கப் பெற்ற அனைத்து கட்புலனாகும், கட்புலனாக சொத்துக்களையும் ஆணையாளர் பரிந்துரைக்கும் வேறு ஒரு தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்றிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை ஆணையாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படுபவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையம்.

20. (1) அமைச்சரால் இந்த நியதிச் சட்ட வரைபின் பிரகாரம் பதிவு இரத்துச் செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்றிலிருந்து நீக்கப்படக்கூடிய அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற அல்லது நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்கள் பொருத்தமான வேறு சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றை தெரிவு செய்யும் வரை அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கல் மற்றும், பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர்கள் சேவைத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படக் கூடிய சிறுவர் மேம்பாட்டு நிலையங்கள் அமையப் பெறலாம்.

(2) (1) ஆவது உப பிரிவின் கீழ் நிறுவப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் நிர்வாகம் மற்றும் பராமரித்தல் பணிகளின் போது மற்றும் தங்கவைக்கும் போதும் ஏற்படும் அனைத்து செலவுகளும் மாகாண சபையின் நிதியிலிருந்து நிதியீட்டப்படல் வேண்டும்.

(3) அமைச்சரினால் இப் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்திற்கு பொறுப்பாக கடமையாற்றுவதற்கு மேற்றன் என்ற பெயரில் அல்லது நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் சிறுவர் நிலைய பரிபாலனத்திற்கு அவசியமான மற்றைய அதிகாரிகள் பணியாளர்கள் தொகை நியமிக்கப்படவேண்டும்.

மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலைய மேற்றன் ஒருவரின் கடமைகளும் பொறுப்புகளும்.

21. (1) மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் மேற்றன் என்பவர் அதன் முகாமைக் குழுவினால் பிறப்பிக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகளுக்கேற்ப கடமையாற்றல் வேண்டும்.

(2) மேற்றன் மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற அல்லது நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களுக்கு போதுமான ஆதரவு, பாதுகாப்பு, மற்றும் பராமரிப்பு வழங்குவது உறுதி செய்யப்படுவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் சிறுவர்களை வேறு ஒரு சிறுவர் மேம்பாட்டு நிலையத்திற்கு மாற்றுவதாயின் அல்லது சிறுவர்களை பெற்றார் அல்லது பாதுகாவலரிடம் ஒப்படைப்பதற்காக முடிந்த அளவு அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றிற்கு பிள்ளைகளை மாற்றுவதற்காக ஆணையாளரிடம் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

22. (1) ஏதேனும் நிதியுதவிகள் அல்லது அன்பளிப்புகள் கிடைக்கப் பெறும் நிதி இந்த நியதிச்சட்ட வரைபு அல்லது அதன் கீழ் உள்ள ஏதேனும் ஒரு பணியை நிறைவேற்றுவதற்காக ஆணையாளரினால் அந்த நிதியைப் பயன்படுத்தலாம். பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி அல்லது ஒதுக்கம் குறித்த பணிக்காக பேணிவரும் விசேடமான வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். வளங்கள் வழங்குதல்.

(2) ஆணையாளர் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பணிகளை நடாத்துவதற்குக் அவருக்குக் கிடைக்கின்ற அனைத்து நிதிகள் குறித்தும் உரிய கணக்குகள் பேணப்பட வேண்டும்.

23. அனைத்து பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையங்களும் வருடாந்த வருமான செலவுக் கணக்குகளை அரச அங்கீகாரம் பெற்ற கணக்காய்வாளர் ஒருவர் அல்லது நிறுவனம் ஒன்றின் மூலமாக கணக்காய்வு செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் கணக்கு அறிக்கை வருடம் முடிவடைந்து மூன்று மாதங்களுக்குள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்குப் பரிசோதனை.

24.ஏதேனுமொரு பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஏதேனும் சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் ஒவ்வொரு சிறுவர்கள் சம்பந்தமாக அந்த சிறுவர்களின் நலனுக்காக வழங்கப்படும் பராமரிப்புக் கொடுப்பனவு ஒன்று வருடாந்தம் ஒரு குறித்த தொகையில் சிறுவர் மேம்பாட்டு நிலைய முகாமையாளருக்கு ஆணையாளரினால் வழங்கப்படலாம். ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள்.

25. (1) பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சிறுவர் மேம்பாட்டு நிலையங்களும் அதன் தன்னார்வ அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தின்போது நியமிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் மூலமாக ஆண்டு நிதியறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிதியறிக்கை குறித்த அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்து ஏற்கப்பட வேண்டும். சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றின் வருடாந்த நிதி அறிக்கை.

(2) (1) ஆவது உப பிரிவின் படி தயாரிக்கப்பட்ட கணக்கறிக்கை குறித்த பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் முகாமையாளரால் ஒவ்வொரு வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

26. (1) அமைச்சரினால் இந்த நியதிச்சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும் மற்றும் வலுப்படுத்தும் பணிகளுக்காக அதிகாரம் வழங்கப்படமுடியும்.

(2) (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் தன்மைக்கு பங்கம் ஏற்படாத விதத்தில் அமைச்சரால் கீழ்வரும் காரணங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்குக் கூடிய காரணங்களுக்காக அறிவுறுத்தல் அமைக்கலாம். அறிவுறுத்தல்.

(அ) இந்த நியதிச்சட்டத்தின் ஊடாக அறிவுறுத்தல்கள் அமைப்பதற்கு அதிகாரம் அல்லது ஏற்பாடுகள் உள்ள அனைத்துக் காரணிகள்.

(ஆ) மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையம் மற்றும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு தேவையான ஆகக் குறைந்த தர நிர்ணயம்.

(இ) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் முன்வைக்குமாறு விதிக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்.

(ஈ) ஆணையாளரால் பராமரிக்கப்பட வேண்டிய ஏடுகள் பெயர்ப்பட்டியல்கள் மற்றும் அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்.

(உ) பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையங்கள் பரிசோதனை நடாத்துவதற்கான விதிமுறைகள்.

(ஊ) அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற அல்லது நீதிமன்ற உத்தரவொன்றின்படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படும் சிறுவர்களை பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றிற்கு சேர்க்கப்படுவது எத்தகைய சந்தர்ப்பங்களில் என்றும் எவ்வாறான காரணங்களுக்காக என்பது குறித்தும் மற்றும்.

(எ) இந்த நியதிச் சட்டத்தை வலுப் பெறச் செய்வதற்கு அவசியமாக அமையும் வேறு காரணிகளின் போது.

(3) அமைச்சரால் வழங்கப்படும் அனைத்து கட்டளைகளும் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு அறிவிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் மாகாண சபையில் முன்வைத்து மாகாண சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(4) மாகாண சபையினால் அனுமதிக்கப்படாத அனைத்து கட்டளைகள் தொடர்பாகவும் அதன் முன்னர் செய்யப்பட்ட எந்த நடவடிக்கைகளுக்கும் பாதகமற்ற அடிப்படையில் அந்த அனுமதித்த தினத்திலிருந்து செல்லுபடியற்றதாக கருதப்பட வேண்டும்.

நியதிச்சட்டத்தை மீறிய அடிப்படையில் சிறுவர் மேம்பாட்டு நிலையம் நடாத்திச் செல்வது குற்றமாகும்.

27. இந்த நியதிச்சட்ட வரைபின் கீழ்:-

(அ) குறித்த பணிக்காக தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் அல்லது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது தற்காலிக அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட பின் சிறுவர் மேம்பாட்டு நிலையமாக குறித்த நிலையத்தை நடாத்திச் செல்லல்;

(ஆ) தற்காலிக அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்ததன் பின் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையமாகப் பதிவு செய்யாது ஏதேனும் சிறுவர் நிலையம் ஒன்றை நடாத்துதல் அல்லது நிர்வகித்தல்;

(இ) குறித்த நிலையத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையமாக தொடர்ந்தும் நடாத்தப்படுகின்ற யாரேனும் ஒருவர் அல்லது முகாமைக் குழு இந்த நியதிச்சட்டத்தின்படி குற்றம் ஒன்றை இழைத்தவராக கருதப்படுவதுடன் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கின்போது குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படின் ஐந்து இலட்சம் ரூபாவிற்கு அதிகரிக்காத தண்டம் அல்லது ஐந்து வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது தண்டம் அறவிடுவதுடன் சிறைப்படுத்தல் என்ற இரண்டும் தண்டனையாக வழங்கப்படலாம்.

தகவல் முன்வைக்காமை மற்றும் தவறான தகவல் வழங்குதல் குற்றமாகும்.

28. (1) இந்த நியதிச்சட்டத்தின்படி முன்வைக்குமாறு கேட்கப்பட்ட ஒரு தகவல் அல்லது அறிக்கை முன்வைக்க நடவடிக்கை எடுக்காத ஒருவர் இந்த நியதிச்சட்டத்தின்படி குற்றம் ஒன்றை இழைத்தவராக கருதப் படுவதுடன் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கின் போது குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படின்,

(அ) அந்தக் குற்றத்தை முதன் முறையாக செய்திருக்குமாயின் இருபத்து ஐயாயிரம் ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டம்

மற்றும்

(ஆ) அந்தக் குற்றத்தை இரண்டாம் முறையாக அல்லது அதன் பின்னர் செய்திருக்குமாயின் இருபத்து ஐயாயிரம் ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டம் அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலம் எனும் இரு வகையில் ஒருவகை சிறைத் தண்டனை அல்லது தண்டம் அறவிடுவதுடன் சிறைப்படுத்தல் என்ற இரண்டுக்கும் உட்படவேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் யாரேனும் ஏதும் பொய்யான தகவல்களை முன்வைக்கும் அல்லது அதுசார்ந்து தயாரிக்கப்பட்ட அறிக்கை அல்லது விண்ணப்பம் பொய்யாக தயாரித்து அனுப்புதல் அல்லது தெரிந்தே பிழையான அறிவித்தல் ஒன்றை முன்வைக்கும் ஒருவர் குற்றத்திற்கு குற்றவாளியாவார் என்பதுடன் அவ்வாறு குற்றவாளியாவதால்:

(அ) அந்தக் குற்றத்தை முதன் முறையாக செய்திருக்குமாயின் இருபத்து ஐயாயிரம் ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டம் ;

மற்றும்

(ஆ) அந்தக் குற்றத்தை இரண்டாம் முறையாக அல்லது அதன் பின்னர் செய்திருக்குமாயின் இருபத்து ஐயாயிரம் ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டம் அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத இரு வகையில் ஒருவகை சிறைத் தண்டனை அல்லது தண்டம் அறவிடுவதுடன் சிறைப்படுத்தல் என்ற இரண்டும்;

அல்லது

குறித்த நபர் சரணடைய வேண்டும்.

*ஆணையாளருக்கு தடைகள் ஏற்படுத்துவது குற்றமாகும்.*

*29.* இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஆணையாளருக்கு அல்லது பரிசோதகர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட பணி ஒன்றை செய்யும் போது ஆணையாளர் அல்லது பரிசோதகர் அல்லது ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட அவ்வாறு செயற்படுவதிலிருந்து தடுக்கின்ற அல்லது அவர்களுக்கு தடையாக அமைகின்ற யாரேனும் ஒருவர் இந்த நியதிச்சட்டத்தின்படி குற்றம் ஒன்றை இழைத்தவராக கருதப்படுவதுடன் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கின்போது குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படின் இருபத்து ஐயாயிரம் ரூபாவிற்கு அதிகரிக்காத தண்டம் அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது தண்டம் அறவிடுவதுடன் சிறைப்படுத்தல் என்ற இரண்டும் தண்டனையாக வழங்கப்படலாம்.

*பொதுவான தண்டனைகள்.*

*30.* இந்நியதிச் சட்டத்தின் ஏதேனும் நியமமொன்றை அல்லது அது சார்ந்து விடுக்கப்பட்ட ஒரு அறிவுறுத் தலை மீறிச் செயற்படும் ஒருவருக்கு அதற்குரிய தண்டனை இந்த நியதியில் குறிப்பிடப்படாதவிடத்து அவ்வாறான குற்றங்களுக்காக நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கு ஒன்றின் பின் குற்றவாளியாகுமிடத்து பத்தாயிரம் ரூபாவிற்கு அதிகரிக்காத தண்டம் அல்லது 06 மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது தண்டம் அறவிடுவதுடன் சிறைப்படுத்தல் என்ற இரண்டும் தண்டனையாக வழங்கப்படலாம்.

*முகாமைக் குழு மூலம் செய்யப்படும் குற்றங்கள்.*

*31.* இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றம் ஒன்றை முகாமைக் குழு செய்யும் சந்தர்ப்பங்களில் குறித்த முகாமைக் குழு:-

(அ) சந்தர்ப்பத்திற்கேற்ப ஏதேனும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் அல்லது பதிவு செய்த சிறுவர் மேம்பாட்டு நிலையங்களை நிர்வகிக்கின்ற முகாமைக் குழுவாயின் அந்தக் குழுவின் அனைத்து அங்கத்தவர்களும்;

அல்லது.

(ஆ) கூட்டுத்தாபனமாயின் கூட்டுத்தாபனத்தின் அனைத்து பணிப்பாளர்கள், முகாமையாளர்கள், செயலாளர்கள், அதிகாரிகள்;

அல்லது

(இ) ஏதேனும் பங்குடமை வியாபார நிறுவனமாயின் அந்த வியாபார நிறுவனத்தின் அனைத்து பங்காளர்களும் முகாமையாளர் ஒருவர் மூலம் செய்யப்பட்ட தவறு தமது விருப்பமோ அனுமதியோ இல்லாத நிலையில் என்பதுடன் அந்த தவறு நிகழாமல் இருப்பதற்காக அவர்களால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக நிறுவுவதானால் அன்றி அக்குற்றத்திற்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் குற்றவாளியாக வேண்டும்.

*முகாமையாளர் போன்றவர்கள் குற்றம் செய்யும் போது மேலதிக தண்டனை விதித்தல்.*

*32.* இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றத்ததை ஏதேனுமொரு பதிவு செய்த சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் முகாமையாளர் அல்லது முகாமைக் குழுவின் உறுப்பினர்கள் அல்லது அந்த நிலையத்தின் பணியாளர்கள் மூலமாக செய்யப்படும்போது அதற்கு நியதிச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள தண்டனை வழங்கப்படுவதுடன் மேலதிகமான குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பதிவு இரத்துச் செய்வதற்கு நீதிவானுக்கு சட்டபூர்வமான அதிகாரம் உண்டு.

*பிறப்பு பதிவு செய்தல்.*

*33.* ஏதேனும் ஒரு வைத்திய சாலையில் பிறந்த ஏதேனும் அநாதை அல்லது கைவிடப்பட்ட குழந்தையாக அடையாளம் காணப்படும் குழந்தை வைத்தியசாலையிலிருந்து வெளியாக்கப்பட முன்னர் அந்தக் குழந்தையின் பிறப்பைப் பதிவு செய்வதற்கான அனைத்து ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் எடுப்பது குறித்த வைத்திய சாலையின் பணிப்பாளரின் அல்லது அது தொடர்பான அதிகாரம் பெற்ற வேறு ஒரு அதிகாரியின் பணியாக அமைய வேண்டும். இது போன்ற பிறப்பு நிகழ்ந்ததும் பதிவு செய்யப்பட்டு உடனடியாக ஆணையாளருக்கு தெரியப்படுத்துவது வைத்தியசாலைப் பணிப்பாளரின் பொறுப்பாகும். அத்துடன் அந்தக் குழந்தையை நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பரிபாலிக்கப்படுகின்ற மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றில் சேர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது பணிப்பாளரின் பொறுப்பாகும்.

*பரிசோதனை அறிக்கை.*

*34.* மாகாணத்தில் அமைந்திருக்கும் மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் சேர்க்கும் அனைத்து மாணவர்கள் சம்பந்தமாகவும், அவ்வாறான சிறுவர்கள் அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் குறித்த பிள்ளை தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பான தகவல் விபரமாக அறிக்கைப்படுத்தப்பட்டு ஆணையாளரிடம் சமர்ப்பிப்பது பொறுப்பான நன்னடத்தை அதிகாரியின் அல்லது ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

*பிள்ளை ஒருவரை குறித்த இடத்தில் அமர்த்துதல்.*

*35.* மாகாணத்தினுள் அமைந்திருக்கும் ஏதேனும் மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையத்திற்கு சிறுவர்களை சேர்க்கப்படும் பிள்ளையை குறித்த இடத்தில் நிறுவுதல் சம்பந்தமான குறித்த அனைத்து பணிகளும் செய்து முடிப்பது ஆணையாளரின் பொறுப்பாகும் என்பதுடன் குறித் பணியைச் செய்வதற்காக நிறுவுதல் குழுவின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

*இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்ககான அவசியப்பாடு.*

*36.* மாகாணத்தினுள் நிறுவப்பட்டிருக்கும் ஏதேனும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் மாகாண சமூக சேவை திணைக்களத்தில் பதிவு செய்திருப்பதாயினும் அதைப் பொருட்படுத்தாது குறித்த தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் இந்த நியதிச்சட்ட வரைபுக்கு உட்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமொன்று எனில் குறித்த நிலையம் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

*பொருள் விவரணம்.*

*37.* இந்த நியதிச்சட்ட வரைபில் சொற்கள் தொடர்பாக விளக்கம் தேவைப்படுமிடத்து -

" பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஒருவரைக் குறிக்கும்.

"தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம்' என்பது, முழுமையாக அல்லது பகுதியளவில் தன்னார்வ நிதி மூலமாக இயக்கப்படுகின்ற சிறுவர் இல்லம் எனப் பொருள்படும். அநாதையான, கைவிடப்பட்ட மற்றும் நீதிமன்ற உத்தரவொன்றின்படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படுமான சிறுவர்களுக்காக விடுதி வசதிகள், பாதுகாப்பு வழங்குவதுடன் பாதுகாவலராக செயற்படும் வேறு ஒரு அமைப்பையும் குறிக்கும்.

" மாகாண சிறுவர் மேம்பாட்டு நிலையம்' என்பது, இந்ந நியதிச்சட்ட வரைபின் 20 ஆம் அத்தியாயத்திற்கு அமைய நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் பராமரிக்கப்படுகின்ற சிறுவர் மேம்பாட்டு நிலையத்தைக் குறிக்கும்.

"அநாதை' எனும் பதம் சிறுவர்களுக்கு பயன்படுத்தப்படும்போது தாய் தந்தை இருவரும் மரணித்த அல்லது பெற்றோரில் ஒருவர் மரணித்து அடுத்தவரால் தாய் தந்தையாக இருக்க முடியாத நிலையில் உள்ள சிறுவர்களைக் குறிப்பதுடன் முறைகேடாகப் பிறந்த குழந்தையாயின் தாய் இறந்து போன சிறுவர்களைக் குறிக்கும்.

"கைவிடப்பட்ட" எனும் பதம் சிறுவர்களுக்கு பயன்படுத்தப்படும்போது தாய் தந்தை இருவராலும் கைவிடப்பட்ட அல்லது பெற்றோரில் ஒருவரால் கைவிடப்பட்டு அடுத்தவர் மரணித்த நிலையில் அல்லது பெற்றோராக இருக்க முடியாத நிலையில் உள்ள அல்லது இருவராலும் பெற்றோராக இருக்க முடியாத நிலையில் உள்ள சிறுவர்களைக் குறிப்பதுடன் திருமணமாகாதவர்களாகுமிடத்து தனது தாயாரால் கைவிடப்பட்ட அல்லது தனது தாயாக இருப்பதற்கு தனது தாயாரால் இயலாது எனும் நிலையில் உள்ள சிறுவர்களைக் குறிக்கும்.

"இயலாமைக்குட்பட்டவர்கள்" என்பது, தாய் அல்லது தந்தை இறந்த, பெற்றோரில் ஒருவரால் கைவிடப்பட்ட அல்லது அடுத்தவர் பெற்றோராக இருக்க முடியாத நிலையில் உள்ள அல்லது பாதுகாப்பு மற்றும் பொறுப்பு என்பன அரச திணைக்களம் ஒன்றினால் அல்லது உள்ளூராட்சி மன்றம் அல்லது அரச மானியம் பெறுகின்ற பெற்றோர் ஒருவரின் பிள்ளை, அல்லது பெற்றோரில் ஒருவர் ஏதேனும் நோய் காரணமாக உழைப்பில் ஈடுபடத் தகுதியற்றவர் என வைத்திய சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு அடுத்தவருக்கு (தாய் அல்லது தந்தை) நிரந்தர வருமானம் இல்லாத அல்லது பெற்றோரில் ஒருவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் அடுத்தவருக்கு (தாய் அல்லது தந்தை) நிரந்தர வருமானம் இல்லாத, சட்ட உத்தரவின் பிரகாரம் அல்லது வேறு ஏதேனும் முறையில் பிரிந்து வாழும் பெற்றோரின் பிள்ளையின் பாதுகாவலராக இருக்கும் தாய்க்கு அல்லது தந்தைக்கு நிரந்தர வருமானம் இல்லாத நிலையிலான பிள்ளைகளைக் குறிக்கும்.

"நீதிமன்ற உத்தரவொன்றின் படி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அவசியப்படுமான" என்பது, 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான சட்டமூலத்தின் கீழ் பாதுகாவலர் மற்றும் பாதுகாப்பு தேவைப்பாடுள்ள பிள்ளைகளைக் குறிக்கும்.

"பரிசோதகர்" என்பது, 12 ஆவது அத்தியாயத்தின் கீழ் ஆணையாளரால் நியமிக்கப்படுகின்ற சிறுவர் மேம்பாட்டு நிலைய பரிசோதகரைக் குறிக்கும்.

"முகாமையாளர்" என்பது, பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையம் ஒன்றின் முகாமை தொடர்பான தேவைகள் ஏற்படும்போது அதற்கான முகாமை அமைப்பு நிறுவப்பட்டு அதன் முகாமையாளராக நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவரைக் குறிக்கும்.

"அமைச்சர்" என்பது, மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அமைச்சரைக் குறிக்கும்.

"நிறுவுதல் குழு" என்பது, இந்த நியதிச் சட்ட வரைபின் 1 ஆவது பின்னிணைப்பில் குறிப்பிட்டதற்கு அமைய சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஆகக் குறைந்த தர நிர்ணயத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகின்ற நிறுவுதல் குழு என்பதாகும்.

"நன்னடத்தை அதிகாரி" என்பது, (24 ஆவது அதிகாரமாகிய) குற்றவாளிகள் நன்னடத்தை நிலையத்தின் பொறுப்பில் விடல் எனும் கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் கீழ் நன்னடத்தை அதிகாரியாக நியமிக்கப்படும் அதிகாரியைக் குறிக்கும்.

"பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையம்" என்பது, இந்த நியதிச் சட்டத்தின் 08 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட சிறுவர் நிலையம் ஒன்றைக் குறிக்கும்.

"பிரிவு" என்பது, (24 ஆவது அதிகாரமாகிய) குற்றவாளிகள் நன்னடத்தைக்கு நிலையத்தின் பொறுப்பில் விடல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்ற அதிகார பிரதேசம் ஒன்றிற்காக அமைக்கப்பட்ட நன்னடத்தைக் காரியாலயம் ஒன்றைக் குறிக்கும்.

38. (1) அநாதை இல்லங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 142) இன் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்த நியதிச் சட்டம் அமுல்படுத்தப்படும் தினத்தில் இயங்குகின்ற மற்றும் இயக்கப்படுகின்ற அநாதை இல்லம் ஒன்றிற்கு இந்த நியதிச் சட்டத்தின் 2 ஆவது அத்தியாயத்தில் எவ்விதமாக கூறப்பட்டிருப்பினும் 2 ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு நடைமுறைப்படுத்துவதற்குக் இந்த நியதிச் சட்டத்திற்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து ஆறு மாதங்கள் இல்லத்தை நடாத்திச் செல்ல அவகாசம் வழங்கப்பட வேண்டும். சமநிலைப்படுத்தல்.

(2) 1 ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமாக பதிவு செய்வதற்காக அதன் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு மாத காலம் முடிவடைவதற்கு முன்னர் இந்த நியதிச் சட்டத்தின் 7 ஆவது அத்தியாயத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும் என கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும்.

(3) இந்த நியதிச் சட்டத்தின் 2 ஆவது அத்தியாயத்தின் படி பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆணையாளரினால் V ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தற்காலிக பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாவதாக அமைதல் வேண்டும். குறித்த கால வரையறை நிறைவடைவதற்கு முன்னர் 4 ஆம் மற்றும் 8 ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிகளுக்கு அமைய ஆணையாளர் செயற்பட வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் குறித்த அநாதை இல்லம் இந்த நியதிச் சட்ட வரைபிற்கு அமைய தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமாக பதிவு செய்ய வேண்டுமா அல்லது இல்லையா என்பது குறித்து தீர்மானித்தல் வேண்டும்.

39. இந்த நியதிச்சட்ட வரைபு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான பிரசுரங்களில் ஏதும் முரண்பாடுகள் இருக்குமிடத்து சிங்கள மொழியிலுள்ள பிரகடனமே வலுப்பெறுவதாக இருக்கும்.

***பின்னிணைப்பு I***

(5). (I) ஆம் அத்தியாயம்

மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் (5). (I) ஆம் அத்தியாயத்தின் கீழ் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான தற்காலிக அனுமதி மற்றும் பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்.

1. பதிவுக்காக விண்ணப்பிக்கும் தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பெயர்
(நிலையத்தின் யாப்பின் பிரதி ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).
2. தன்னார்வ அமைப்பொன்றாக பதிவு செய்யும் போது வழங்கப்பட்ட பதிவிலக்கம்

3. தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் சேர்க்கப்படவுள்ள சிறுவர்களின் பால் வேறுபாடு மற்றும் குறைந்த மற்றும் ஆகக் கூடிய வயது மட்டம்.

4. உத்தேச சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பராமரிப்பதற்கான நிதி மூலங்கள்.

5. உத்தேச சிறுவர் மேம்பாட்டு நிலையத்தை நிறுவுவதற்காக உள்ள மொத்த நிதி விபரம்.

6. உத்தேச சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் முகாமைக் குழு அங்கத்தவர்களின் பெயர் மற்றும் முகவரி.

7. விண்ணப்பதாரர் விதிமுறைகளுக்கு அமைய ஆகக் குறைந்த தர நிர்ணயத்தை அடைந்துள்ளாரா என்ற விபரம்.

8. உத்தேச சிறுவர் மேம்பாட்டு நிலையத்தை நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களின் உரிமை விபரம் (உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (title deed)),

9. முன்மொழியப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்தினை நடாத்துவதற்காக கட்டப்படவுள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களின் அனுமதிக்கப்பட்ட வரைபடம்.

- மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையென உறுதி செய்கின்றேன்.

.................................... ............. ..............

திகதி ................................ உத்தேச சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின்
முகாமைத்துவ சபைத் தலைவரின் கையொப்பம்.

***பின்னிணைப்பு II***

(6). (2) (ஆ)(அத்தியாயம்)-

*மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் (6). (2) ஆம் அத்தியாயத்தின் கீழ் தற்காலிக அனுமதிச் சான்றிதழ்:*

................................ மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகளை மாகாண ஆணையாளரான ..............................................................................

எனும் பெயருடைய என்னால் ..............................................................................

எனும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை ............................................ எனும் இடத்தில் அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டு .................................. இலக்க .............................. மாகாண தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலைய நியதிச் சட்டத்தின் (அத்தியாயம்) (6) (2) (ஆ) இற்கு அமைய இந்த தற்காலிக அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

திகதி ............................. ....................................................

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் ஆணையாளரின் கையொப்பம்.

***பின்னிணைப்பு III***

(8). (2) (ஆ)(அத்தியாயம்)-

*மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் (8). (2) ஆம் அத்தியாயத்தின் கீழ்*

பதிவுச் சான்றிதழ்

................................ மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் மாகாண ஆணையாளரான ..............................................................................

எனும் நான் ............................................................................ எனும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை ............................................ எனும் இடத்தில் அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டு .................................. இலக்க .............................. மாகாண தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலைய நியதிச் சட்டத்தின் (அத்தியாயம்)

(8) (2) (ஆ) இற்கு அமைய பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் மேம்பாட்டு நிலையமாக பதிவு செய்யப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

20…. ……………………மாதம் …….. திகதி………… வழங்கப்பட்டது

………………………………………………………
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள்
ஆணையாளர் கையொப்பம் பதவி முத்திரை

***பின்னிணைப்பு* IV**

(15). (1) (அத்தியாயம்)

*மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் 15 (1) ஆம் அத்தியாயத்தின் அடிப்படையில் அறிக்கை*

பதிவு செய்யப்பட்ட சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பெயர் மற்றும் அமைவிடம்

- இந்த நாளில் சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வதிவிடம் பெற்றிருக்கும் சிறுவர்களின் தொகையும் ஆண்/பெண் விபரமும்.
- இத்தினத்திற்கு முன்னதான மூன்று மாத காலத்தில் சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் சிறுவர்களில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் விபரம் மற்றும் நோய் விபரம்
- சிறுவர் மேம்பாட்டு நிலையத்தில் வசிக்கும் சிறுவர்களின் ஒரு வேளை உணவின் தன்மை, அளவு மற்றும் வழங்கப்படும் உணவு வேளைகள்
- இத்தினத்திற்கு முன்னதான மூன்று மாத காலத்தில் சிறுவர் மேம்பாட்டு நிலையத்திலிருந்து விலகிச் சென்ற சிறுவர்கள் (இருப்பின்) விபரம் மற்றும் விலகிச் சென்றதற்கான காரணம்.

திகதி …………………………………...

………………………………………………………
பதிவுசெய்யப்பட்ட குழந்தை மேம்பாட்டு நிலைய
முகாமைத்துவ சபைத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

***பின்னிணைப்பு* V**

38 (3) அத்தியாயம்

*மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் (38). (3) ஆம் அத்தியாயத்தின் கீழ் அறிக்கை*

பதிவுசெய்யப்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் பெயர் மற்றும் அமைவிடம்

- இந்நாளில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வதிவிடம் வழங்கப்பட்டிருக்கும் சிறுவர் தொகை மற்றும் பால் விபரம்.

மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் மாகாண ஆணையாளர் ……………………………… ……………………………………………ஆகிய நான், (அத்தியாயம்142) அநாதைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ……………………………………………………… எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்ற மற்றும் ……………………………………………எனும் இடத்தில் அமைந்துள்ள அநாதை இல்லம்………………………… மாதம் ………….. ஆம் திகதி முதல் ஆறு மாதங்களுக்கு செல்லுபடியானதாக அமைதல் வேண்டும். 2017 ஆம் ஆண்டின் ……………………….. இலக்க மாகாண தன்னார்வ சிறுவர் நிலைய நியதிச்சட்டத்தின் 38 (3) ஆம் அத்தியாயத்தின் கீழ் இந்த தற்காலிக பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும்.

திகதி ……………………………………...….

………………………………………………………
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள்
ஆணையாளரின் கையொப்பம், பதவி முத்திரை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.